*11*

# இருதயக் கோளாறுடன் இருந்த சபை

## (2:1–7)

எபேசு சபையின் கூடுகையில் நீங்கள் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்கள் அன்பு சகோதரரான யோவானிடமிருந்து கடிதம் ஒன்று வந்திருப்பதாகச் செய்தி பரவியுள்ளது, அந்தக் கடிதம் வாசிக்கப் படுவதைக் கேட்பதற்காக சபை கூடியுள்ளது.[1] செய்தியைக் கொண்டு வந்தவர் நின்று கொண்டிருக்கையில் நீங்கள் எதிர்பார்ப்புடன் முன்னால் சாய்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.

### *வாழ்த்துதல் (2:1அ)*

“எபேசு சபையின் தூதனுக்கு (செய்தியாளருக்கு)[2] நீ எழுதவேண்டியது என்னவெனில்” (வசனம் 1அ) என்பவைகளே அவர் வாசிக்கின்ற முதல் வார்த்தைகளாக உள்ளன. எபேசு நகரம் “இந்த ஏழு நகரங்களில் மிகவும் முக்கியமானதாக இருந்த” காரணத்தினால் ஒருவேளை இந்த சபை முதலாவது குறிப்பிடப்பட்டிருக்கலாம்.[3] இது “ஆசியாவின் ஆபரணம்” என்று அழைக்கப்பட்டிருந்தது. இது உலகத்தின் அப்பாகத்தில் வர்த்தக மையமாக இருந்தது மற்றும் பழங்கால உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றான தியானாளின் கோயில் இருந்த இடம் என்பதால் புகழ்பெற்று விளங்கியது. இது மேன்மையான, கலாச்சாரமிக்க, மற்றும் வளம்பொருந்திய நகரமாக இருந்தது.[4] எனது சிந்தையானது, நானும் எனது மனைவி ஜோவும் 1989ன் பனிக்காலத்தில் எபேசுவுக்குச் சென்று, அதன் அற்றலைந்த பளிங்குத் தெருக்களில் நடந்து மிகப்பெரிய ஆம்ப்பி தியேட்டரின்[5] முன்னால் நின்ற காட்சியை நோக்கிப் பின் செல்லுகிறது. துருக்கியில் நாங்கள் சென்று கண்டிருந்த எல்லாப் பழங்கால இடங்களிலும், எபேசுவின் சிதிலங்களைப் போல் விரிவானதோ அல்லது மனதை ஈர்க்கக் கூடியதோ வேறெதுவும் இல்லை.[6]

சுவிசேஷம் பரவுதல் பற்றியும் எபேசு நகரம் விசேஷித்த தனிச்சிறப்பைக் கொண்டிருந்தது. பவுல் இங்கு ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து (சுவிசேஷத்திற்காக) உழைத்திருந்தார் (நடபடிகள் 19:1-22; 20:31).[7] அந்த வேளையில், “ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக்

கேட்டார்கள்'' (நடபடிகள் 19:10). ஏழு சபைகளில் பல (அல்லது பெரும்பான்மையானவை) அந்த வேளையில் நிலைநாட்டப் பட்டிருக்கலாம். பின்பு பவுல் எருசலேமுக்குச் செல்லும் தமது வழியில் இருந்தபோது, அவர் எபேசு நகரில் இருந்த சபையின் மூப்பர்களை (மிலேத்து நகருக்கு வரவழைத்து)ச் சந்தித்து, "உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று'' எச்சரிக்கை செய்தார் (நடபடிகள் 20:30). பவுல் ரோமாபுரிச் சிறையில் இருந்தபோது, அவர் எபேசுவிலிருந்த சபைக்கு ஒரு நிருபம் எழுதினார். பவுலின் விடுதலைக்குப் பின்பு, அவர் தீமோத்தேயுவை "வேற்றுமையான உபதேசங்களையும் போதியாதபடிக்கு ... சிலருக்குக் கட்டளையிடும் பொருட்டாக" எபேசு நகரில் விட்டுச் சென்றார் (1 தீமோத்தேயு 1:3). ஒருசில ஆண்டுகளுக்குப் பின்பு, எபேசு நகரம் அப்போஸ்தலரான யோவானுக்கு வசிப்பிடம் ஆயிற்று, அவர் அங்கே தமது வாழ்வின் இருபது அல்லது முப்பது ஆண்டுகளாக வாழ்ந்திருந்தார். அதிகமான தெய்வீக அன்பும் உழைப்பும் எபேசு நகரின்மீது பொழியப்பட்டிருந்தது.

## இயேசுவைப் பற்றிய விவரிப்பு (2:1ஆ)

வாசிப்பவர் தொடருகின்றார்: "ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது" (வசனம் 1ஆ). (பக்கம் 149 காணவும்.)

இந்த விவரிப்பு, அதிகாரம் 1ல் உள்ள தரிசனத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது, இது இயேசுவைப் பற்றி எபேசுவில் இருந்த சபை அறிவதற்கு அவசியமான இரண்டு உண்மைகளைப் பிரதிபலிக்கிறது.

#### பாதுகாப்பதற்கான அவரது வல்லமை/அதிகாரம்

முதலாவது, அவர்கள் தங்கள் பலத்திற்கு இயேசுவைச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது என்று வலியுறுத்தப்பட்டது. டொமீஷியன், தனது மகன் வானமண்டலங்களைத் தன் கையில் பிடித்திருப்பது போன்ற சித்தரிப்புடன் நாணயம் ஒன்றை வெளியிட்டிருந்தான், இது அவன் இந்த அண்டத்தின் விதிக்குப் பொறுப்பானவன் என்று மறைமுகமாய் உணர்த்துவதாக இருந்தது. இயேசுவோ, டொமீஷியனோ அல்லது அவனது வாரிசுகளோ அல்ல, மாறாகத் தாமே தமது கரத்தில் நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருப்பதை எபேசியர்கள் அறியவேண்டும் என்று விரும்பினார். கிறிஸ்து எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறவராக இருக்கின்றார்.

வெளிப்படுத்தின விசேஷம் 2:1ல் ''ஏந்தி'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது 1:16ல் பயன்படுத்தப் பட்டுள்ள வார்த்தையைக் காட்டிலும் அதிக பலம் மிகுந்ததாக உள்ளது[8] (ஆனால் தமிழ் வேதாகமத்தில் இவ்விரு இடங்களிலும் ''ஏந்தி'' என்ற வார்த்தைதான் உள்ளது) இது "உறுதியாகப் பற்றிக்கொண்டிருத்தலைக்

குறிக்கிறது.''[9] சபைகளை[10] இயேசு தமது கரத்தில் பாதுகாப்புடன் வைத்துக்கொண்டிருந்தார். இயேசுவின் *வல்லமையும்/அதிகாரமும்* மற்றும் *பாதுகாப்பும்* வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. இன்றைய நாட்களில், சபைக் குழுமங்கள் மற்றும் தனித்தனிக் கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் நமது பலத்திற்கு இன்னமும் இயேசுவையே சார்ந்திருக்கின்றோம்.

**அவரது பிரசன்னமும் உள்ளுணர்தலும்**

இரண்டாவது, இயேசுவைப் பற்றிய இந்த விவரிப்பு, எபேசியர்கள் தங்கள் செய்கைகள் குறித்து இயேசுவுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு நினைவூட்டியது. அதிகாரம் 1ன் தரிசனத்தில், இயேசு, ''குத்துவிளக்குகளின் மத்தியிலே'' *நின்றிருப்பதை* யோவான் கண்டார் (1:13); இவ்வேளையில் அவர்(இயேசு) குத்துவிளக்குகளின் மத்தியிலே *உலாவிக்கொண்டிருப்பதாக* விவரிக்கப்பட்டார். அவர் உலாவுகையில், சபைகளை ஆய்வுசெய்து, அவற்றின் பலங்களைக் கவனித்து, அவற்றின் பலவீனங்களைக் கண்டுபிடித்து, அவற்றின் ஆவிக்குரிய நிலையைப் பரிசோதித்து அறிந்தார். இயேசுவின் *பிரசன்னமும் உள்ளுணர்தலும்* இவ்விடத்தில் வலியுறுத்தப் பட்டிருந்தன.

இயேசு தமது சபைகளின் மத்தியில் இன்னமும் உலாவுகின்றாரா? ஆம், அவர் உலாவுகின்றார். இன்னமும் அவர் பலங்களையும் பலவீனங்களையும் கவனிக்கின்ற ஆய்வுப்பயணங்களை மேற்கொள்ளுகின்றாரா? ஆம், அவர் அதைச் செய்கின்றார். நீங்களும் நானும் ஆராதிக்கின்ற சபைக்குழுமங்களுக்கு இயேசு வரும்போது, அவர் காண்பது என்ன? உங்களுடைய மற்றும் என்னுடைய இருதயங்களை அவர் ஆராய்கின்றபோது, அவர் கண்டறிவது என்ன? அவரை மகிழ்வடையச் செய்யும்படி அவர் கண்டறிவது என்ன? அவரைக் கவலையடையச் செய்யும்படி அவர் கண்டறிவது என்ன? என்பவை மிகவும் முக்கியமானவைகளாக உள்ளன.

இயேசு ஒருவரே பரலோகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சபை ஆய்வாளராக இருக்கின்றார். அந்த வேலையைச் சரியாகச் செய்வதற்கு அவர் ஒருவர் மாத்திரமே உரிமையுடையவராக,[11] பொறுப்புடையவராக, மற்றும் ஆதாரமூலங்களை[12] உடையவராக இருக்கின்றார். நாம் தவறைக் கண்டுபிடித்து அதை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கின்றார் (2:2, 6), ஆனால் சகோதரத்துவத்தில் உள்ள சபைகளின் ஆய்வாளர்களாக நம்மையே நாம் நியமித்துக்கொள்ளும் சோதனையை நாம் எதிர்த்து நிற்க வேண்டும். நம்மில் பெரும்பான்மையானவர்கள், நமது சொந்த குறைபாடுகளையும், நாம் ஊழியம் செய்கின்ற மற்றும் ஆராதிக்கின்ற சபைக்குழுமங்களின் தேவைகளையும் நமது கைகள் நிறையக் கொண்டுள்ளோம்.

## பாராட்டுரை (2:2, 3, 6)

வாசகர் தொடருகையில், எபேசுவில் இருந்த சபை பாராட்டப் படுகிறது. முந்திய சொற்றொடருடன் பிணைக்கும் வார்த்தைகளைக்

*கொண்டு பாராட்டுரை தொடங்குகிறது: ''உன்[13] கிரியைகளை[14] … அறிந்திருக்கிறேன்'' (வசனங்கள் 2அ, 3இ). ''அறிந்து'' என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தையானது "அறிதலின் முழுமையைக் கொண்டிருத்தல், பூரணமாக அறிதல்"[15] என்று அர்த்தப்படுகிறது. இந்தச் சொற்றொடரை* CEV *வேதாகமம்,* "I know everything you've done" *["நீ செய்துள்ள ஒவ்வொன்றையும் நான் அறிகின்றேன்''] என்று மொழிபெயர்க்கிறது. எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்கள், "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமும் வெளியரங்கமுமாயிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" (எபிரேயர் 4:13) என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாயிருந்தது. நாம் அதையும் புரிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது.*

*எபேசுவில் இருந்த சபையின் நேர்மறைப் பண்புகளுடன் இயேசு தொடங்கினார். ஒரு சபைக்குழுமத்தையோ அல்லது ஒரு தனிநபரையோ நாம் எதிர்கொள்ளும்போது, நேர்மையுடனும் உண்மையுடனும் பாராட்டத்தகுந்த தனிப்பட்ட பண்புகளைக் குறிப்பிடுவதுடன் நாம் தொடங்க வேண்டும்.*

***ஊழியமும் உறுதியாக நிலைத்திருத்தலும்***

*முதலில் இயேசு. (எபேசுவில் இருந்த) சபையை அதன் ஊழியத்திற் காகவும் உறுதியுடன் நிலைத்திருந்த தன்மைக்காகவும் பாராட்டினார்: "உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும் … அறிந்திருக்கிறேன்''[16] (வசனங்கள் 2அ, 3இ). ''பிரயாசம்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, ''இளைப்படையச் செய்கிற உழைப்பு/பிரயாசம்" என்று அர்த்தப்படுத்துகிறது.[17] செய்யப்பட வேண்டிய வேலை இருந்தபோது அவர்கள் தங்கள் கைகளைத் தங்களின் (பேன்ட்) பாக்கெட்டுகளில் விட்டுக்கொண்டு சுற்றிலும் சும்மா நின்று கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள், தங்களின் தசைகள் வலியெடுக்கும் வரையிலும் மற்றும் தங்களின் உடைகள் வியர்வையால் நனையும் வரையிலும் உழைத்த மக்களின் முயற்சியின் வகையைப்போல் தங்கள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.*

*மேலும், வேலையானது கடினமாகியபோது, அவர்கள் வேலை செய்வதை விட்டுவிடவில்லை. வசனம் 3ல் இயேசு, "நீ சகித்துக்கொண்டிருக் கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்" என்றும் கூடக் கூறினார். "இளைப்படையாமல்" என்ற சொற்றொடர், வசனம் 2ல் உள்ள "பிரயாசம்" என்பதற்கான அதே கிரேக்க வார்த்தையில் இருந்தே வருகிறது. யாரோ ஒருவர் கூறியபடி, "அவர்கள் தங்கள் பிரயாசத்தில் இளைப்படையாமல், இளைப்படையும் வரைப் பிரயாசப்பட்டனர்" என்று கூறினார். இந்தப் பண்பு நம் எல்லாருக்கும் அவசியமாயிருக்கிறது! (கலாத்தியர் 6:9; 2 தெசலோனிக்கேயர் 3:13ஐக் காணவும்.)*

*மனித உடலை ஒரு விவரிப்பாகப் பயன்படுத்தி, எபேசு சபையானது*

*ஊழியத்தில் பலமான வலது கையைக் கொண்டிருந்தது என்று நாம் கூற முடியும்.*




**ஆரோக்கியமான தன்மையும் பிரிந்திருத்தலும்**

பின்பு இயேசு, அவர்களின் ஆரோக்கியமான தன்மைக்காகவும்[18] அவர்கள் (அப்போஸ்தலரல்லாதவர்களின் உபதேசத்திலிருந்து) பிரிந்திருத் தலுக்காகவும் அவர்களைப் பாராட்டினார்: "நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்'' (வசனம் 2இ). ''சகித்தல்'' என்ற வார்த்தை வசனங்கள் 2 மற்றும் 3 ஆகிய இரண்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது;[19] அவர்கள் இளைப்படையச் செய்யும் பிரயாசத்தைச் சகித்துக் கொண்டிருந்தனர், ஆனால் பொய்யானவைகளாய் இருந்த போதனைகளைச் சகிக்கக் கூடாதிருந்தனர்.

எபேசு சபையின் மூப்பர்களைப் பவுல், "மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்'' என்று எச்சரித்தார் (நடபடிகள் 20:29). தங்களை "அப்போஸ்தலர்கள்'' என்று அழைத்துக் கொண்ட, ''ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய்கள்'' சிலர் அவர்களில் இருந்தனர் (2 கொரிந்தியர் 11:13ஐக் காணவும்). அவர்கள் அனேகமாக. முதலில் சில நல்ல மனப்பதிவுகளை ஏற்படுத்தியிருக்கலாம், ஈர்ப்புள்ள நற்சான்றுகளையும் பெற்றிருந்திருக்கலாம், மற்றும் அவர்கள் ஜனக்கூட்டத்தின் சிந்தனையை (தங்களைச் சுற்றி) வட்டமிடச் செய்திருக்கலாம். இருப்பினும் எபேசுவில் இருந்த சபையானது முன் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. பவுலின் எச்சரிக்கைகளுடன் கூடுதலாக, யோவானும் ''பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித் தறியுங்கள்" என்று எழுதியிருந்தார் (1 யோவான் 4:1). எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்கள், புதிதாக வருபவர்களின் போதனையைத் தேவனுடைய வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்த்திருப்பார்கள் (நடபடிகள் 17:11). அவர்கள் அனேகமாக, சுய உரிமைகோருதல் கொண்ட "அப்போஸ்தலர்களை.'' "உண்மையான அப்போஸ்தலரின் அடையாளங்களை [அற்புதங்களை]'' செய்யும்படி அறைகூவல் விடுத்திருப்பார்கள் (2 கொரிந்தியர் 12:12).[20]

எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்கள், கள்ளபோதகர்களின் போதனையைக் குறித்துக் கவலைப்பட்டதுடன் நின்றுவிடவில்லை; கூடுதலாக அவர்கள், அந்த போதகர்களின் செல்வாக்கைக் குறித்தும் கவலைப் பட்டனர். வசனம் 6ல் இயேசு கூடுதலாக, "நான் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய்'' என்றும் கூறினார்.

நிக்கொலாய் மதஸ்தர் என்பவர்கள் தேவபக்தியற்ற வாழ்வை வாழ்ந்து மற்றவர்களும் அதையே செய்யும்படி வேண்டிக்கொண்ட கள்ளப்போதகர்களாய் இருந்தனர். பெர்கமு சபைக்கு எழுதிய கடிதத்தில் இயேசு, நிக்கொலாய் மதஸ்தரின் போதனையை, "விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப்போடும்படி" ஊக்குவித்த "பிலேயாமுடைய போதகத்துடன்" இணைவித்தார் (2:14, 15).[21] ஹிப்போலிட்டஸ் என்பவர், நிக்கொலாய் மதஸ்தரைத் தொடக்ககால அறிவுசார்ந்த குழுமம்[22] என்பதாக அடையாளப்படுத்தினார், மற்றும் இந்தக் குழுமம் ஒழுக்கவீனத்தை நடைமுறைப்படுத்திற்று.[23] அவர்களின் தேவபக்தியற்ற போதனையை அதிகம் ஏற்புடையதாகக் காணச்செய்வதற்கு, இந்த நிக்கொலாய் மதஸ்தர், முதல் நூற்றாண்டில் இருந்த சபையின் "உதவிக்காரர்களில்" ஒருவராயிருந்த (நடபடிகள் 6:5) நிக்கொலாய் என்பவரால் தாங்கள் போதிக்கப்பட்டிருந்ததாக உரிமை கோரினர்.[24]

"வெறுக்கிறேன்" என்ற வார்த்தையைக் கவனிக்கவும்: இயேசு, "நான் *வெறுக்கிற* நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் *வெறுக்கிறாய்*" என்று கூறினார். தேவன் தீமையை வெறுக்கின்றார் (நீதிமொழிகள் 6:16-19), மற்றும் நாமும் தீமையை வெறுக்க வேண்டும் என்றும் அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கின்றார் (ரோமர் 12:9). இருப்பினும், எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்கள் நிக்கொலாய் மதஸ்தரை வெறுக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்; அவர்கள் நிக்கொலாய் மதஸ்தரின் *கிரியைகளைத்தான்* வெறுத்தனர். அவர்கள் நடைமுறைச் செய்கையை வெறுத்தனர் ஆனால் மக்களை அன்புகூர்ந்தனர். நாம் ஒவ்வொருவரும் பாவத்தை வெறுக்க வேண்டும், ஆனால் பாவிகள்மீது அன்புகூர வேண்டும். ஒரு மருத்துவர், நோயாளியின் உடலை அழிக்கிற புற்றுநோயை வெறுக்கின்றார், ஆனால் அந்த நோயாளியின்மீது பரிவிரக்கம் கொண்டுள்ளார்.

"சகிக்கக்கூடாமலிருக்கிறதையும்" என்ற சொற்றொடர் அனேகமாக, எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்கள், தங்கள் மத்தியில் கள்ளபோதகர்கள் நிலைத்திருப்பதை அனுமதிக்கவில்லை. அவர்களின் தவறை வெளிப்படுத்தி அவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொண்டனர் (2 தெசலோனிக்கேயர் 3:6; 1 கொரிந்தியர் 5:6-11; மத்தேயு 18:17ஐக் காணவும்). அவர்களின் எண்ணப்போக்கைப் பின்வரும் வார்த்தைகளில் ஹோமர் ஹெய்லீ விளக்கப்படுத்தினார்: "[நிக்கொலாய் மதஸ்தர்] மாற்றப்படாதவர்களாய் இருந்தால், அவர்கள் இடம் மாற்றப்படட்டும்."[25]

AB வேதாகமம், "cannot endure" என்பதை "cannot *tolerate*" என்று மொழிபெயர்க்கிறது. இன்றைய நாட்களில் உலகத்தின் பல பகுதிகளில், அப்படிப்பட்ட ஒரு கூற்றானது "அரசியல்ரீதியாகச் சரியற்றது" என்று நியாயந்தீர்க்கப்படும். சகிப்புத்தன்மை என்பது பாராட்டத் தக்கதாக உள்ளது, சகியாமை என்பது கண்டனம் பண்ணப்பட வேண்டியதாக உள்ளது; ஆனால் இயேசு, ஒருசபையின் சகியாமைக்காக - குறிப்பாக, பாவத்தை அது (எபேசுவை) சகியாதிருந்தமைக்காக - அதைப் பாராட்டினார். நாம் பாவத்திற்கு எதிராக "மரணம் வரைக்கும்" ஒரு

யுத்தத்தில் இருக்கின்றோம் (எபேசியர் 6:11; வெளிப்படுத்தின விசேஷம் 12:17); நாம் உடன்பாடு செய்துகொள்ள முடியாது.




மனித உடலைப் பயன்படுத்தும் நமது விவரிப்பைத் தொடர்வதற்கு, எபேசுவில் இருந்த சபை, ஒழுக்கம் என்ற பலம்வாய்ந்த இடது கையைக் கொண்டிருந்தது என்று கூற முடியும்.

நம்மில் பெரும்பான்மையானவர்கள், மேலே விவரிக்கப்பட்ட பண்புகளைக் கொண்டுள்ள சபைக்குழுமத்தில் அங்கம் வகிப்பதற்குப் புளகாங்கிதம் அடைந்து இருப்போம். இருப்பினும் ஆய்வறிக்கையானது இன்னும் முடியவில்லை.

## கண்டனம் (2:4)

நமது கற்பனையில் உள்ள எபேசுவின் சபைக்கூடுகையில் இருந்த யாவரும், இந்த வேளையில் தங்கள் முகங்களில் புன்சிரிப்புடன் சுற்றிலும் கண்ணோக்கி, ஒருவருக்கொருவர் தலையை அசைத்துக் கொள்கின்றனர். ஒருவேளை சிலர், "இந்த விஷயம் பற்றி நாமேகூட சிறப்பாகக் கூறியிருக்க இயலாது!" என்று நினைத்திருக்கலாம். இருப்பினும் வாசகர் பின்வரும் வார்த்தைகளைத் தொடர்ந்து வாசிக்கையில், புன்னகை மறைகிறது: "உன்பேரில் எனக்குக் குறை உண்டு" (வசனம் 4ஆ). கர்த்தர் கண்டுபிடித்தது என்ன என்பது பற்றி வாசகர் கூறுகையில் அதிர்ச்சியான அமைதி நிலவுகிறது: "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை[26] விட்டாய்[27]" (வசனம் 4அ).

இந்தக் கிறிஸ்தவர்கள், ஊழியம் என்ற பலம்வாய்ந்த வலது கரத்தையும், ஒழுக்கம் என்ற பலம்வாய்ந்த இடது கரத்தையும் கொண்டிருக்கலாம், ஆனால் இவர்கள் இருதயக்கோளாறு கொண்டிருந்தனர்.[28]

பரிபூரணமான ஆரோக்கியம் உள்ளவராகக் காணப்பட்டு, ஆனால் பின்பு, சிறிது எச்சரிக்கை அல்லது எச்சரிக்கையே இல்லாது இறந்து போனவர் ஒருவரைக் குறித்து நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டு இருக்கின்றீர் களா? கடினமான பண்ணை உழைப்பாளியாய் இருந்து, சிறிய செரிமானக் கோளாறு மாத்திரமே கொண்டிருந்ததாக நினைத்தவரும், தமது ஐம்பத்து ஐந்து வயதில் மாரடைப்பால் இறந்துபோனவருமான எனது மாமனாரைப் பற்றி நான்



நினைத்துப் பார்க்கின்றேன். எபேசுவில் இருந்த சபையானது ஆவிக்குரிய வகையில் ஆரோக்கியமானதாகக் காணப்பட்டது. அது கர்த்தருக்கென்று ஊழியம் செய்துகொண்டிருந்தது, அது உபதேசரீதியாக மிகவும் சரியானதாக இருந்தது - ஆனால் அது சாவுக்கேதுவான தவறு ஒன்றைக் கொண்டிருந்தது: அதாவது, வியாதிப்பட்ட இருதயம் ஒன்றை அது கொண்டிருந்தது.

இவ்விடத்தில் இயேசு, தேவன் மீதான அன்பைக்குறித்துப் பேசினாரா அல்லது மனிதகுலத்தின் மீதான அன்பைக்குறித்துப் பேசினாரா என்பதில் விளக்கவுரையாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர்.[29] உண்மையான அன்பு என்பது இவ்விரண்டையும் ஒன்றிணைப்பதால் இந்தக் கேள்வி முக்கியமற்றதாக உள்ளது (1 யோவான் 4:20). "ஆதியில்" என்பது தான் இயேசுவின் கூற்றில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தையாக உள்ளது; "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்."[30] பிலிப்ஸ் அவர்கள் இதைப் பின்வருமாறு மொழிபெயர்த்தார்: "You do not love as you did *at first*."[31] ("நீ முதலில் செய்தது போல அன்புகூருவதில்லை.")

"ஆதியிலே கொண்டிருந்த அன்பு" என்ற சொற்றொடரை மதித்து மனதில் கொள்வதற்கு, புதிதாகத் திருமணம் செய்துகொண்டுள்ள தம்பதியைப் பற்றி நீங்கள் நினைத்துப் பாருங்கள். அவர்களின் அன்பை நீங்கள் எவ்வாறு குறிப்பிடுவீர்கள்? பின்வருவன போன்ற வார்த்தைகள் உங்கள் மனதிற்கு வரலாம்: "வலிவார்ந்த," "விறுவிறுப்பான," "தாராளமான." இப்போது ஆவிக்குரிய விஷயத்திற்கு மாறி வந்து, நீங்கள் முதன்முதலாகக் கிறிஸ்தவரான வேளையைத் திரும்பக் கண்ணோக்கிப் பாருங்கள். நீங்கள் ஞானஸ்நானம் பெற்றபோது எவ்வளவாகக் களிப்புற்றிருந்தீர்கள் என்பதை உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? ஆராதனைவேளைகளை நீங்கள் எவ்வளவு மகிழ்வுடன் அனுபவித்தீர்கள் என்பதை உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? மற்றவர்களுக்கு உதவுவதற்கான வாய்ப்புக்களை நீங்கள் எவ்வாறு வரவேற்றீர்கள் என்பதை உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? உங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு நீங்கள் எவ்வாறு ஏங்கினீர்கள் என்பதை உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? அந்த வேளையில் நீங்கள் கொண்டிருந்த அன்பை நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்? அனேகமாக, "வலிவார்ந்த," "விறுவிறுப்பான," "தாராளமான" என்ற வார்த்தைகள் இவ்விடத்தில் நன்கு பயன்படலாம்.

ஒரு திருமணத்தில் உள்ள அன்பு - அல்லது தேவனுடனான நமது உறவில் உள்ள அன்பு - தானாகவே அதன் வலிவார்ந்த தன்மையையும் நெருக்கத்தையும் காத்துக்கொள்கிறதா? அது அவ்வாறு செய்வதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். திருமணத்தில் நடைபெறக்கூடியது என்ன என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள்: ஒரு தம்பதியர், பிரகாசமாகப் பற்றியெரியும் அன்புடன் தங்கள் வாழ்வைத் தொடங்குகின்றனர். பின்பு காலம் செல்லும்போது, அந்த (அன்பின்) சுவாலையானது புதுப்பிக்கப் படாதிருந்தால், தாழ்வாக, இன்னும் தாழ்வாக எரியத் தொடங்குகிறது. அந்தத் தம்பதியர் ஒரேவகையான வழியில் தொடர்ந்து நடந்துகொண்டிருக்

கலாம்: அந்தப் பெண், ஒரு நல்ல மனைவியாக இருக்க முயற்சி செய்கின்றாள், அந்த மனிதர் தமது குடும்பத்திற்குத் தேவையானவற்றை அளிக்கின்றார், ஆனால் (அன்பின்) சுடர் காணப்படுவதில்லை. அவர்கள் "உணர்வுகளினூடாகக் கடந்து" மட்டும் செல்லுகின்றனர்; அவர்களின் திருமணம், இயந்திரகதியானதாகி உள்ளது.

நாம், நமது ஆவிக்குரிய வாழ்விலும், வலிவார்ந்த தன்மையையும் நெருக்கத்தையும் இழந்துபோக முடியும். கர்த்தருக்கான நமது ஊழியம் ஒரு (அன்றாட) பழக்க வழக்கமாகியுள்ளதையும், நமது இருதயம் அதில் ஈடுபடாததையும், அன்பு என்பதைக் காட்டிலும் கடைமை என்பதின் உணர்வினாலேயே நாம் கீழ்ப்படிவதையும் உணர்ந்தறியும்படி ஒரு நாள் காலையில் நாம் விழித்தெழுகின்றோம்.

யாரேனும் ஒருவர், "ஆனால், திருமணத்திலோ அல்லது நமது கிறிஸ்தவ வாழ்க்கையிலோ, ஆதியில் கொண்டிருந்த அன்பின் உணர்வெழுச்சி தொடரவேண்டும் என்று எதிர்பார்த்தலானது எதார்த்தமற்றதாக உள்ளது. நமது அன்பை மங்கச் செய்வதற்குக் காலமானது ஒரு வழியைக் கொண்டுள்ளது. அது அவ்வாறு மாத்திரமே உள்ளது, எனவே அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்" என்று சொல்லக்கூடும். அது இயேசுவைக் கவலைப் படுத்தியதா? அவர், "*ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு*" (வசனம் 4) என்று சொன்னார். அதைப் பற்றி இயேசு கவலை கொண்டிருந்தார் என்றால், நாமும் அதைப்பற்றிக் கவலை கொண்டிருக்க வேண்டும்.

கர்த்தருடைய கவலைக்கான காரணம் அடுத்த வசனத்தில் காணப்படுகிறது.

## எச்சரிக்கை மற்றும் அச்சுறுத்தல் (2:5)

நமது கற்பனையில் உள்ள சபைக்குழுமம், வாசகர் கொடுத்த இயேசுவின் பின்வரும் எச்சரிக்கையை எதிர்கொள்கிறது: "*ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்*" (வசனம் 5). விளக்குத் தண்டு என்பது சபைக்குழுமத்தின் அடையாளமாகவே உள்ளது (1:20). இயேசு விளக்குத்தண்டை நீக்கிவிடுவார் என்ற அடையாளத்துவம் சபைக்குழுமம் இல்லாது ஒழியக்கூடும் என்பதை அர்த்தப்படுத்த வேண்டும்.[32] அணைந்துபோன/எரிவதை நிறுத்திவிடுகிற மின்விளக்கு ஒன்றிற்கு என்ன நேரிடுகிறது? அது தூக்கியெறியப்பட்டுவிடுகிறது. அன்பின் சுடர் இல்லாத ஒரு விளக்குத்தண்டுக்கு என்ன நேரிடுகிறது? அது உடைப்பில் போடப்படுகிறது. "உயிர்ப்பிக்கப்படுதல் அல்லது நீக்கப் படுதல்!"[33] என்ற வார்த்தைகளில் எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களின் தேர்ந்துகொள்ளுதலை ரிச்சர்டு ரோஜர்ஸ் அவர்கள் தொகுத்துரைத்தார்.

இதை ஒருக்காலும் சந்தேகிக்க வேண்டாம்: இருதயத்தின் மோசமான

நிலைக்குச் சிகிச்சை அளிக்காமல் விட்டுவிடுகிறபோது, அது மரணத்திற்கு வழிநடத்துகிறது! மனித உடலைப் பொறுத்தவரை இது உண்மையாக உள்ளது. திருமணத்தைப் பொறுத்தவரை இது உண்மையாக உள்ளது. சபைக்குழுமத்தை பொறுத்தவரை இது உண்மையாக உள்ளது. நமது சொந்த ஆத்துமாக்களைப் பொறுத்தவரையிலும் கூட இது உண்மையாக உள்ளது.

எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இயேசு தமது முன் ஆராய்வைக் கொடுத்ததுடன் அவர்களுக்கு தமது மருத்துவக் குறிப்பையும் கொடுத்தார். இருதயக்கோளாறுக்கான அவரது பரிகாரம் மூன்று மடங்கானதாக இருந்தது (மற்றும் இருக்கிறது).[34]

### நினைத்துப் பார்த்தல்[35] [Remember]

முதலாவதாக, ஞாபகப்படுத்துதல் என்பது பயன்படுத்தப்பட வேண்டும்: "ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பது நினைத்து[36] ..." (வசனம் 5அ). திருமணம் செய்துகொண்ட தம்பதிக்கு நான் ஆலோசனை கூறுகின்றபோது, முதலாவது நான், அந்தக் கூட்டாளிகள் தங்கள் உறவின் தொடக்க நாட்களை நினைத்துப் பார்க்கும்படி செய்வதுண்டு: அவர்கள் ஒருவர் மற்றவரை முதன்முதலாகப் பார்த்த வேளை, அவர்கள் முதன்முதலில் தனித்திருந்தது, அவர்களின் முதல் முத்தம், அவர் முதன்முதலில் தம்மைத் திருமணம் செய்துகொள்ளும்படி அவளிடத்தில் கேட்டது, இன்னும் பிறவிஷயங்கள். அவர்கள் ஒவ்வொருவரின் நினைவுகூருதலைப் பற்றி நான், "அது நடந்தபோது நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்?" என்று கேட்பதுண்டு. அவர்களின் உறவு, மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றால், முதலில் அவர்கள், ஒருவர் மற்றவரில் எதைக் கண்டனர், ஒருவர் மற்றவரை எதற்காகத் திருமணம் செய்துகொள்ள விரும்பினர், அவர்கள் எவ்வளவாக அன்பில் ஈடுபட்டிருந்தனர் என்பவற்றை நினைவுகூரவேண்டும். அவர்கள் எவ்வளவு விஷயங்களை இழந்துபோயுள்ளனர் மற்றும் தொடக்ககால (ஆதியில் கொண்டிருந்த) அன்பை மீண்டும் ஆதாயப்படுத்துவது எவ்வளவு அவசியமாக உள்ளது என்பவற்றை உணர்ந்தறிய வேண்டும்.

அதுபோலவே, ஒருவர் ஆவிக்குரிய வகையில் தாம் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விலகும்போது, அவர் தாம் கிறிஸ்தவராய் இருக்கத் தொடங்கிய நாட்களை நினைவுகூருவது அவசியமாக உள்ளது. அந்த நாட்களின் உணர்வெழுச்சியையும் மெய்சிலிர்ப்பையும் அவர் நினைவுகூர வேண்டியது அவசியமாக உள்ளது. மேலும் அவர், தமது பாவத்திலிருந்து தாம் இரட்சிக்கப்பட்டபோது, தமக்குக் கர்த்தர் செய்தது என்ன என்பதையும் மீண்டும் நினைவுகூர வேண்டியது அவசியமாக உள்ளது. ஜான் நியூட்டன் அவர்கள் பிரசங்கியார் ஆவதற்கு முன்பு, அவர் மிகவும் பாவம் நிறைந்த வாழ்வை வாழ்ந்திருந்தார், அவர் அடிமை வர்த்தகராகக் கடல்களில் பயணம் செய்திருந்தார். அவரது மனமாற்றத்திற்குப் பின்பு, அவர் பின்வரும் வசனத்தைப் பெரிய எழுத்துக்களில் எழுதி அதைத் தமது அறைச்சுவரில் தொங்கவிட்டார்: "நீ எகிப்துதேசத்தில்

*அடிமையாயிருந்ததையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை மீட்டுக் கொண்டதையும் நினைவுகூரக்கடவாய்" (உபாகமம் 15:15*; KJV*).*

**மனந்திரும்புதல் [Repent]**

*அடுத்ததாக, சித்தம் என்பது ஈடுபடுத்தப்பட வேண்டும்: " ... மனந்திரும்பி"*[37] *(வ. 5அ).* இந்தக் கட்டளையை நாம் தவறவிடாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படிக்குக் கர்த்தர் இதை இவ்வசனத்தின் முடிவில் திரும்பவும் கூறினார்: *''நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்'' (வசனம் 5ஈ)* மனந்திரும்புதல் என்பது ''நினைத்துப் பார்த்தலின் [அடிப்படையில் அமைகிற] சிந்தையில் ஏற்படும் மாற்றம்'' என்பதாக உள்ளது.[38] நாம் எவற்றை இழந்திருக்கின்றோம் என்பதை நினைத்துப் பார்க்கையில், நமது தேவைகளை ஒப்புக்கொள்வதும் மாறும்படியான முடிவை மேற்கொள் வதும் அவசியமாக உள்ளது.

திருமணத்தில் பிரச்சனைகள் கொண்டுள்ள தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கி ஆற்றுப்படுத்துவதில் நான், அவர்களின் திருமண நிபந்தனையைப் பற்றி அவர்கள் செய்யத் திட்டமிட்டுள்ளவை யாவை என்பது, அந்த நிபந்தனையை விட முக்கியமானதாக உள்ளது என்று வலியுறுத்துவதுண்டு. அவர்கள் உண்மையிலேயே தங்கள் அன்பின் சுவாலையை மீண்டும் தூண்டிவிட விரும்பினால், அது நடைபெறும்; அதை அவர்கள் விரும்பவில்லை என்றால், எவரொருவரும் கூறுகின்ற அல்லது செய்கின்ற எதுவும் வேறுபாடு எதையும் ஏற்படுத்திவிடாது.

உண்மையான மனந்திரும்புதல் என்பது நினைவுகூருதலின் அடிப்படையிலானதாக உள்ளது மற்றும் இது ஒரு தீர்மானத்தை - இவ்விஷயத்தில், உங்களின் ஆதி அன்பைத் திரும்பவும் பிடித்துக்கொள் வதற்குத் தேவனுடைய உதவியுடன், உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்வதற்கான தீர்மானத்தை - விளைவிக்கிறது.

**மறுபடியும் செய்தல்**[39] **[Repeat]**

*கடைசியாக, பலமும் திறன்களும் ஈடுபடுத்தப்பட்டாக வேண்டும்: "... ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக". 5இ).* முதலில் இந்த அறிவுறுத்துதலானது வினோதமானதாக ஒலிக்கலாம். அவர்கள் இயேசுவுக்காக உழைப்பதை விட்டொழிக்காது இருந்தமைக்காக இயேசு அவர்களைப் பாராட்டியிருந்தாரே *(2:2, 3).* பிறகு ஏன் அவர்களிடத்தில் அவர், ''கிரியைகளைச் செய்வாயாக'' என்று கூறினார். மீண்டுமாக ஒருமுறை, "ஆதியில்'' என்பதே திறவுகோல் வார்த்தையாக உள்ளது: *"... ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக."* அவர்கள் இன்னமும் கிரியைகளைச் செய்துகொண்டிருந்தனர், ஆனால் அவர்கள் தாங்கள் முதன்முதலில் மனமாறியபோது செய்திருந்த கிரியைகளை (அப்போது) செய்யவில்லை.

எபேசுவில் இருந்த சபையால் செய்யப்பட்ட இந்தக் கிரியைகள் "ஆதியில் செய்த கிரியைகளில்'' இருந்து எவ்வாறு வேறுபட்டிருந்தன?

புதிதாகத் திருமணம் செய்துகொண்ட தம்பதிபற்றிய நமது விவரிப்பு, அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க ஒருவேளை நமக்கு உதவலாம்: அவர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்தும் வழிகளை நினைத்துப் பாருங்கள்: ஒருவர் மற்றவரின் காதுகளில் இரகசியமாய்க் கூறின மென்மையான வார்த்தைகள்; ''நான் உன்னை நேசிக்கிறேன்'' என்று கூறுவதற்கு நாளின் மத்திய வேளையில் தொலைபேசி அழைப்புகள்; தழுவுதல்கள், தட்டுதல்கள், முத்தங்கள்; சிறு பரிசுகள்; பிரியமான வார்த்தைக் குறிப்புகள்.[40] ஆண்டுகள் கடந்து செல்லுகையில், இவைபோன்ற நெருக்கம்வாய்ந்த செயல்கள் நம்மில் பலரால் துரதிர்ஷ்டவசமாக விட்டொழிக்கப் படுகின்றன - இதன் விளைவாக நமது திருமணங்கள் (திருமண உறவுகள்) பாதிக்கப்படுகின்றன.

இதை நாம், கர்த்தருடன் உள்ள நமது உறவிற்கு நடைமுறைப் படுத்துவோம்: நாம் முதன்முதலாகக் கிறிஸ்தவராகி ஊக்கத்தினால் நிறைந்தபோது, நாம் செய்த செயல்களில், இன்று நாம் நடந்துகொள்வதில் இருந்து மாறுபட்டிருப்பவை எவை? ஒருவேளை நாம், ஆராதனைக் கூட்டங்களுக்குப் புன்முறுவல் பூத்த முகங்களுடன் முன்னதாகவே சென்றிருக்கலாம். ஒருவேளை நாம், நம்மால் முடிந்த அளவுக்குப் பிற கிறிஸ்தவர்களைப் பார்க்கச் சென்றிருக்கலாம். ஒருவேளை நாம், நமக்காக இயேசு என்ன செய்திருக்கின்றார் என்பதை நாம் சந்தித்த ஒவ்வொரு வருடனும் கூறியிருக்கலாம். ஒருவேளை நாம், உதவுவதற்கான வாய்ப்பைக் கண்ணோக்கி - ஊழியம் செய்வதற்கான அறைகூவலை ஏற்றுக்கொண்டு - இருந்திருக்கலாம். இப்போது அந்தக் காலம் கடந்துள்ளது, அந்த "ஆதியில் செய்த கிரியைகள்" வெறும் நினைவாக மாத்திரம் இருக்கலாம் - மற்றும் நமது கிறிஸ்தவம் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களின் ஆதி அன்பை மீண்டும் பற்றிக்கொள்வதற்கு, அவர்கள் ஆதியில் செய்த கிரியைகளைச் செய்ய வேண்டியது அவசியமாய் இருந்தது. அன்பின் கிரியைகளைச் செய்தல் என்பது அன்பின் எண்ணப்போக்கை வெளிப்படுத்தும். யாரோ ஒருவர், "உணருதலின் புதிய வழியில் செயல்படுதல் என்பது, புதிய வழியில் செயல்படுதலாக உணருதலைக் காட்டிலும் சுலபமானதாக உள்ளது" என்று கூறினார். இது திருமணத்தில் கிரியை செய்கிறது. திருமணவாழ்வில் இடர்ப்பாடுகளைக் கொண்டுள்ள தம்பதிகளுக்கு நான், அவர்கள் ஒருவர் மற்றவருக்கு அன்பை வெளிப்படுத்தத் தொடக்கநாட்களில் செய்தவற்றை மீண்டும் ஒருமுறை செய்யும்படி அவர்களை ஊக்கப்படுத்துவது உண்டு.[41] இதைச் செய்வதற்கு அவர்கள் மனவிருப்பம் கொண்டிருந்தால், அன்பின் சுடரானது மறுபடியுமாகத் தூண்டியெழுப்பப்பட முடியும். இந்தக் கொள்கையானது நமது ஆவிக்குரிய வாழ்விலும் செயல்பட முடியும் என்பதை நாம் அறிய வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார்.

## புத்திகூறுதல் (2:7அ)

கடிதத்தின் இந்த இடத்தை வாசகர் அடைந்தபோது, அதை வாசிக்கக் கேட்டவர்கள் தங்கள் தலைகளை அசைத்து, "ஆம், சகோதரர் ரூபஸ் அதிகம்

அன்புகூர வேண்டியவராக இருக்கின்றார்'' என்று சிந்தித்ததை நான் கற்பனை செய்ய முடிகிறது. பின்வருவதுபோன்ற ஒரு பதில் செயலை இயேசு எதிர்பார்த்தார்: "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்"[42] (வசனம் 7அ). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர் "இந்தக் கடிதத்தை நான் சபைக்குழுமத்திற்கு எழுதினேன், ஆனால் உங்களைத் தனிநபர் என்ற வகையினாலேயே நான் உண்மையில் நினைக்கின்றேன். உங்களில் ஒவ்வொருவரும் தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

## வாக்குத்தத்தம் (2:7ஆ)

இயேசுவினிடமிருந்து வந்த மெய்சிலிர்க்கச் செய்யும் ஒரு வாக்குத்தத் தத்துடன் வாசகர் இதை வாசித்து முடிக்கின்றார்: "ஜெயங்கொள்ளு கிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன்" (வசனம் 7ஆ). சில விஷயங்கள் மாறவில்லையென்றால், ஆவிக்குரிய மரணம் காத்திருந்த தென்று எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இயேசு எச்சரிக்கை செய்தார். இவ்விடத்தில் அவர்களுக்கு அவர், தமது அறைகூவலுக்கு அவர்கள் பதில்செயல் செய்தால், ஆவிக்குரிய வாழ்வு அவர்களுடையதாக இருக்கும் என்று வாக்குத்தத்தம் செய்தார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, பாவத்தின் காரணமாக மக்கள் ஜீவ விருட்சத்தின்மீது தங்களுக்கிருந்த உரிமையை இழந்தனர் (ஆதியாகமம் 3:24). அந்த உரிமை மனிதகுலத்திற்கு மீளக்கட்டுவிக்கப்பட வேண்டும் என்று இயேசு இவ்விடத்தில் சுட்டிக்காண் பித்தார். வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி அதிகாரம், தேவனுடைய பரதீசில் - பரலோகத்தில்[43] - ஜீவவிருட்சம் மலர்ந்து செழித்திருப்பதையும், இரட்சிக்கப்பட்டவர்கள் வாழ்வை நிலைநிறுத்தும் கனியை மகிழ்வுடன் புசித்து அனுபவிப்பதையும் சித்தரிக்கிறது (22:1, 2)!



**ஜீவவிருட்சத்தின் கனியை உண்ணுதல் (2:7)**

எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்கள், என்றேனும் ஒருநாளில் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டும் என்றால், அவர்கள் தங்கள் அன்பின் சுவாலையை மீண்டும் தூண்டிவிட வேண்டியிருந்தது. இவ்வசனத் தில் உள்ள "ஜெயங்கொள்ளுகிறவன்" என்ற வார்த்தையானது "வெற்றி"[44] என்பதற்கான கிரேக்க வார்த்தையின் வினைச்சொல் வடிவத்தில் இருந்து வந்துள்ளது. "இது ஒருவர் தாம் இருப்பதாகக் கண்டறியும் சூழ்நிலையில் வெற்றிகொண்டவராய் இருத்தல் என்று அர்த்தப்படுகிறது."[45] இந்தக் கடிதத்தில் இது, எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்களின் ஆதி அன்பினு டைய வலிவையும் வீரியத்தையும் திரும்ப ஆதாயப்படுத்திக் கொள்ளு தலைக் குறிக்கிறது.

# முடிவுரை

மீண்டும் ஒருமுறை, நாம் நமது கற்பனையில் உள்ள எபேசு சபை கூடுகைக்குத் திரும்புவோம்: அவர்களுக்காக எழுதப்பட்ட இந்தக் கடிதத்தை வாசகர் வாசித்து முடிக்கின்றபோது, அதைக் கவனித்துக் கேட்டவர்கள் எவ்வாறு மறுசெயல் செய்தனர்? வரலாற்றுப்பூர்வமான பதிவேடுகளின்படி, எபேசுவில் இருந்த சபையானது பல ஆண்டுகள் தொடர்ந்து, ஆசியா என்ற ரோம மாகாணத்தில் நன்மைக்கான சக்தியாக விளங்கிற்று. இது, அந்த சபையார், குறைந்த பட்சம் சற்றுகாலத்திற்கு, இயேசுவின் எச்சரிக்கையைத் தீவிரமானதாக எடுத்துக்கொண்டனர் என்று அர்த்தப்படுகிறது என்பதாக நினைக்க நான் விரும்புகின்றேன்.

இந்தச் கடிதம் எழுதப்பட்டுச் சற்றுக் காலத்திற்குள்ளேயே, டொமீஷியன் இறந்தான் மற்றும் யோவான் நாடுகடத்தப்பட்டதில் இருந்து விடுவிக்கப்பட்டார். தொடக்க கால எழுத்தாளர்களின் கூற்றுப்படி, யோவான் தமது மரணப்படுக்கையில் இருந்தபோது, அவர் தமது சகோதரர்கள் ஒருவரில் ஒருவர் அன்புகூரும்படி வேண்டிக்கேட்டுக் கொண்டார். அவர்கள் ஒருவேளை, “ஆனால் நீங்கள் எங்களுக்குப் புதிய விஷயங்கள் சிலவற்றைக் கூறும்படி நாங்கள் விரும்புகின்றோம்” என்று மறுப்பு உரைத்திருக்கலாம். யோவான் தமது முதல் நிருபத்தில் இருந்து பின்வரும் பகுதிகளை மேற்கோள் காண்பித்துப் பதில் அளித்திருக்கக் கூடும்: “சகோதரரே, நான் உங்களுக்குப் புதிய கற்பனையை அல்ல, ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழைய கற்பனையையே எழுதுகிறேன். அந்தப் பழைய கற்பனை நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிற வசனந்தானே ... நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது” (1 யோவான் 2:7; 3:11).

எபேசுவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட இந்தக் கடிதத்தை நான், கடிதங்களிலேயே மிகவும் கலக்கம் ஏற்படுத்தும் கடிதமாகக் கண்டறிகின்றேன், ஏனெனில் இது என்னை, கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கான எனது நோக்கங்களைக் கண்ணோக்கும்படி கட்டாயப்படுத்துகிறது. நான் வாழ்கின்ற வழியின்படி நான் ஏன் வாழ்கின்றேன்? தேவனுக்கு ஊழியம் செய்தலை நீண்டகாலமாகச் செய்துவருவதாலும், அது என் நடைமுறைப் பழக்கமாகிவிட்டபடியினாலும் அதை நான் செய்கின்றேனா? கடமை உணர்வின் காரணமாக நான் ஆராதிக்கின்றேனா? மக்கள் என்னைப் புகழ்வார்கள் என்பதற்காக நான் மற்றவர்களுக்கு உதவுகின்றேனா? அல்லது நான் தேவன்மீது அன்புகூருவதாலும் அவர் நிமித்தமாகவும் அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிகின்றேனா?

வியாதிப்பட்ட இருதயத்தைக் கண்டுபிடித்தல் என்பதைக் காட்டிலும் கடினமான ஆவிக்குரிய பிரச்சனை வேறு எதுவும் இல்லை, ஆனால் நமது ஆவிக்குரிய ஆரோக்கியத்தை, இதைவிட அதிகம் பாதிக்கக் கூடிய வேறு எந்த பிரச்சனையும் இல்லை. பழுதுபட்ட இருதயம் பழுது நீக்கப்பட்டால் ஒழிய, மரணம் என்பது தவிர்க்க இயலாததாக உள்ளது. எபேசுவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட இந்தக் கடிதமானது நம் ஒவ்வொருவரையும்

*நோக்கிப் பின்வருமாறு முழக்கம் இடுகிறது: இந்த வேளையே, தீவிரமான இருதய பரிசோதனைக்கு மாபெரும் வைத்தியரிடத்தில் செல்வதற்கான வேளையாக உள்ளது![46]*

*உங்கள் ஆதி அன்பை நீங்கள் விட்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளதா? அப்படியிருந்தால், உங்கள் இருதயத்தில் தேய்ந்து மறையும் அன்பின் சுடரை - மிகவும் தாமதமாகிவிடுவதற்குள் - மீண்டும் தூண்டி எழுப்புவதற்கு இன்றைய தினமே சரியான நாளாக உள்ளது![47]*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

ஏழு கடிதங்களின்மீதான பிரசங்கங்களுக்குப் பிரசங்கியார்கள் புத்திசாலித்தனமான பல தலைப்புக்களை வடிவமைத்துள்ளனர். எபேசுவில் இருந்த சபைக்கான கடிதம் பற்றிய பிரசங்கத்திற்கான தலைப்புகளில், "ஆதியில் கொண்டிருந்த அன்பு," "அன்பு ஆனால் குறைவுபட்ட அன்பு," "ஒன்று குறைய எல்லா விஷயங்களும்," "மரணத்திற்கு ஏதுவான ஒரு தவறு," மற்றும் "தேனிலவு முடிந்தது!" என்பவை உள்ளடங்குகின்றன.

நான், இந்தப் பாடத்திலும் இன்னும் ஒரு பாடத்திலும், கடிதங்கள் பற்றிய எனது பிரதானக் கருத்துக்களின் ஏழு கூறுகளைப் பயன்படுத்து கின்றேன். நீங்கள் மூன்று முதல் ஐந்து வரையிலான பிரதானக் கருத்துக் களின்மீது ஒரு எளிய பிரசங்கத்துவ அணுகுமுறையை விரும்பித் தேர்ந்து கொள்ளலாம். பல எழுத்தாளர்கள் / பேச்சாளர்கள், தங்கள் முன்னுரையில், வாழ்த்துதலையும் விவரிப்பையும் பற்றிக் கலந்துரையாடி, புத்திமதிகளை யும் வாக்குத்தத்தத்தையும் தங்கள் முடிவுரையில் உள்ளடக்கி, கடிதத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியை மாத்திரம் வரைக்குறிப்பிட விட்டு விடுகின்றனர். எபேசு சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தின் மைய வசனம் எவ்வாறு வரைக்குறிப்பிடப்படலாம் என்பதற்கு இங்கு இரண்டு உதாரணங்கள் தரப்படுகின்றன: "Approval," "Accusation," and "Admonition"[48] ["அங்கீகாரம்," "குற்றச்சாட்டு," மற்றும் "புத்திகூறுதல்"]; "The Commendation," "The Criticism," and "The Counsel"[49] ["பாராட்டுரை," "விமர்சனம்," மற்றும் "ஆலோசனை"]. இப்படிப்பட்ட வரைக்குறிப்புகளில், முதல் பகுதியானது பொதுவாக, வசனங்கள் 2, 3 மற்றும் 6ப் பற்றியதாக உள்ளது; இரண்டாம் பகுதியானது வசனம் 4ஐ விவரிக்கிறது; மற்றும் மூன்றாம் பகுதியானது வசனம் 5ஐ எடுத்துரைத்து முடிக்கிறது.

"ஏழு சபைகளுக்குக் கடிதங்கள்" என்ற பிரசங்கத்தொடரில் வெளிப்படுத்தின விசேஷம் 2:1-7ஐப் பயன்படுத்துவதுடன் கூடுதலாக, இவ்வசனப்பகுதியானது திருமணத்தில் அன்பை உயிர்ப்பிப்பது எப்படி என்பதன் மீதான செய்திக்குத் தனியே பயன்படுத்தப்பட முடியும்: "சுடரானது மீண்டும் தூண்டிவிடப்பட முடியுமா?" இப்படிப்பட்ட ஒரு எடுத்துரைப்புக்கு, திருமண அன்பு மற்றும் ஆவிக்குரிய அன்பு ஆகியவற்றிற்கு இடையிலான ஒப்பீட்டுப் பகுதியை விரிவாக்கிக் கொள்ளவும்.

குறிப்புகள்

[1]இந்தக் கடிதம் எபேசுவில் இருந்த சபைக்குப் பிறகடிதங்கள் மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தின் எஞ்சியபகுதி ஆகியவை இன்றி அனுப் பப்பட்டதற்குக் குறிப்பு எதையும் நாம் கண்டறிவதில்லை. இருப்பினும் இந்தப் பாடத்தின் நோக்கத்திற்காக, எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட இந்தக் கடிதம் மாத்திரம் வாசிக்கப்பட்டதாக நாம் கண்ணோக்குவோம். [2]இந்தத் தூதர்களின் (செய்தியாளர்களின்) அடையாளத்துவம் பற்றிய கேள்வி இந்தப் புத்தகத்தில் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டுள்ளது. [3]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 58. முன்பு பவுல் செய்தது போலவே, யோவான் தமது இயக்கங்களுக்கு அடித்தளமாக எபேசு நகரத்தைக் கொண்டிருந்தபடியால், அந்த நகரம் முதலில் குறிப்பிடப்பட்டிருக்கவும் வாய்ப்பு உள்ளது. [4]எபேசுவைப் பற்றிப் பொதுவாகவும் தியானாளின் ஆலயத்தைப் பற்றிக் குறிப்பாகவும் விவரிப்பதற்குப் பல எழுத்தாளர்கள் கணிசமான அளவுக்கு இடத்தைச் செலவிட்டுள்ளனர். இதற்குக் காரணங்கள் பின்வருமாறு: (1) பழங்கால உலகத்தில் எபேசுவின் முக்கியத்துவம் மற்றும் (2) அந்த நகரத்தில் கிடைக்கக்கூடிய தகவல்களாகும். எபேசுவைப் பற்றிய எனது குறிப்புகள், வேண்டுமென்றே மிகவும் சுருக்கப் பட்டிருப்பதற்கான இரண்டு காரணங்கள் பின்வருமாறு: (1) வேதாகம மாணவர்கள், அபோஸ்தலருடைய நடபடிகள், எபேசியருக்கு எழுதிய நிருபம், மற்றும் 1 தீமோத்தேயு நிருபம் ஆகியவை பற்றிய தங்கள் படிப்பில் எபேசு நகரத்தைப் பற்றிய தகவல்களைப் பெறுகின்றனர், மற்றும் (2) அந்த நகரத்தின் பண்பு என்பது இந்தக்கடிதத்தில் மிகக் குறைவாகவே வெளிச்சமாக்கப்பட்டுள்ளது. [5]இந்த ஆம்ப்பி தியேட்டர் என்பது தியேட்டர் (அரங்கசாலை) என்று மாத்திரம் நடபடிகள் 19:29, 31ல் அழைக்கப்பட்டுள்ளது. [6]இந்தச் சிதைவுகள் துருக்கியில் உள்ள செல்கக் என்ற நகரின் அருகில் அமைந்துள்ளன. [7]எபேசு இருந்த இடத்தை இப்புத்தகத்தில் உள்ள ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மு தீவும் என்ற வரைபடத்தில் காணவும். [8]1:16ல் NASB வேதாகமம் இவ்வார்த்தையை "held" என்று மொழிபெயர்த்துள்ளது, ஆனால் கிரேக்க வார்த்தையானது "to have" (பெற்றிருத்தல்) என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. [9]Morris, 59. [10]ஏழு நட்சத்திரங்கள் பற்றிய ஒரு கலந்துரையாடலுக்கு, இந்தப் புத்தகத்திலுள்ள "மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்" என்ற பாடத்தில் காணவும். இந்த நட்சத்திரங்கள் ஏதோ ஒருவகையில் சபைக்குழுமங்களைக் குறித்தன என்று முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது (மற்றும் இவ்விதமாக, அவைகள் அந்த சபைக்குழுமங்களின் உறுப்பினர்களையும் குறித்தன).

[11]இயேசு ஒருவரே சபையின் தலையாக இருக்கின்றார் (எபேசியர் 1:22, 23; கொலோசெயர் 1:18, 24). [12]நம்மைப் போலின்றி, ஒரு நபருக்குள் இருப்பதை (மனிதரின் உள்ளத்தில் இருப்பதை) இயேசு அறிகின்றார் (யோவான் 2:24, 25); அவர் மாத்திரமே, நோக்கங்களை நியாயந்தீர்க்கத் தகுதிபெற்றவராக இருக்கின்றார். [13]"தூதன்" என்ற ஒருமை வார்த்தைக்கு (வசனம் 1) இணையாக, இவ்விடத்தில் "நீ" என்ற ஒருமை வார்த்தை உள்ளது, இது (எபேசுவில் உள்ள) ஒரே ஒரு சபைக்குழுமத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. கிரேக்க வசனப் பகுதியில், கடிதம் முழுவதும் ஒருமையிலேயே உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. [14]"உன்னுடைய கிரியைகள்" என்பது நற்கிரியைகள் மற்றும்/அல்லது துர்க்கிரியைகள் ஆகியவற்றைக் குறிப்பிடக்கூடும். [15]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 120. [16]KJVயில் "patience" என்றுள்ளது. இது "பொறுமையுடன் சகித்தலை" குறிக்கிறது. [17]William Barclay, *Letters to the Seven Churches* (Philadelphia: Westminster Press, 1957), 22. [18]2 தீமோத்தேயு 1:13,

*தீத்து 2:1* மற்றும் பிற வசனப்பகுதிகள், "ஆரோக்கிய மான" உபதேசம் அல்லது போதனை என்பதைக் குறிப்பிடுகின்றன. இவ்வசனப் பகுதிகளில் "ஆரோக்கியமான" என்பது "ஆரோக்கியமான உடல்" என்ற சொற்றொடரில் "ஆரோக்கியமான" என்ற வார்த்தையைப் போன்றே அர்த்தப்படுகிறது: அதாவது, ஆரோக்கியமான, முழுமையான, பலம்வாய்ந்த என்று அர்த்தப்படுகிறது. [19]வினைச்சொல் தவிர, இவ்வார்த்தைகள் ஆங்கிலத்திலும் கிரேக்க மொழியிலும் ஒரே மாதிரியானவைகளாகவே உள்ளன. [20]"அப்போஸ்தலர்கள்" என்று தங்களை அழைத்துக்கொண்டவர்கள், நடபடிகள் 1:21, 22ல் விதிக்கப்பட்ட தகுதிகளின்படியாகவும் சோதிக்கப் பட்டிருக்கலாம். இன்றைய நாட்களில் மக்களில் சிலர், தாங்கள் அப்போஸ்தலர்களாக அல்லது அப்போஸ்தலர்களின் வாரிசுகளாக இருப்பதாக உரிமைகோருகின்றனர்; இவர்களும் இதே நிபந்தனைகளைக் கொண்டு சோதிக்கப்பட வேண்டும்.

[21]இந்தப் புத்தகத்தில் பெர்கமுவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தைப் பற்றி நாம் படிக்கும்போது, பாலாம் பற்றி அதிகமாகக் கூறப்படும். [22]அறிவு சார்ந்த குழுமத்தினரின், தேவனுக்கெதிரான செயல்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் முழுமையான வளர்ச்சி பெற்றிருந்தன, ஆனால் இந்தத் தத்துவத்தின் தொடக்ககால வெளிப்பாடு என்பது முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே நிலவியிருந்தது மற்றும் இவைகள் பவுல், யோவான் மற்றும் பிற கிறிஸ்துவ எழுத்தாளர்களால் கண்டனம் பண்ணப்பட்டிருந்தன. அறிவுசார்ந்த குழுமத்தினர், மற்றவர்களுக்குக் கிடைக்கப் பெற்றிராத அறிவைத் தாங்கள் கொண்டிருந்ததாக உரிமைகோரினர். [23]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation,* The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 126. ஹிப்போலிட்டஸ் என்பவர் "சபையின் முற்பிதாக்கள்" என்று அழைக்கப்பட்டவர்களில் ஒருவராயிருந்தார் (அதாவது, தொடக்ககால சபையில் செல்வாக்குச் செலுத்தியிருந்த ஏவுதல் பெற்றிராத எழுத்தாளர்களில் ஒருவராயிருந்தார்). [24]அவர்களின் தவறு உண்மையிலேயே நிகொலாயிடம் இருந்து வந்ததா இல்லையா என்பதை நாம் அறிவதில்லை. ஏவுதல் பெற்றிராத, தொடக்க கால எழுத்தாளர்களில் சிலர், நிக்கொலாய் சத்தியத்தில் இருந்து விழுந்துபோனார் என்று கூறினர், ஆனால் தொடக்ககால எழுத்தாளர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்தக் கருத்தை மறுத்தனர். [25]Hailey, 121. [26]"அன்பு" என்ற வார்த்தை *agape* (சுயநலமற்ற, உறுதிப்பாடு கொண்ட அன்பு) என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *Agape* அன்பு என்பது கிறிஸ்தவத் தகுதிகளில் மகாபெரியதாக உள்ளது (1 கொரிந்தியர் 13:13; கொலோசெயர் 3:14). [27]"விட்டாய்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "ஒரு பலமான சொற்றொடராக உள்ளது; அவர்கள் ஆதியில் கொண்டிருந்த ஆர்வமான அன்பின் நேர்த்தியான, மகிழ்பொங்கும் தன்மையை முற்றிலுமாகக் கைவிட்டிருந்தனர்" (Morris, 60). [28]இந்த சபைக்குழுமத்தைப் பற்றிய இயேசுவின் பாராட்டுரைக்கும் கண்டனத்திற்கும் இடையில் தொடர்பு இருக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது - அதாவது, அவர்களின் வைராக்கியமானது, மாய்மாலமான, நியாயந்தீர்க்கும் ஆவியில் அழிக்கப்பட்டிருந்தது. (ஆனால்) இயேசு அவர்களின் வைராக்கியத்தைப் பாராட்டியிருப்பதால், இதைப் பற்றி நான் சந்தேகிக்கின்றேன். இருப்பினும் சத்தியத்தின் மீதான நமது அன்பு, மாய்மாலமான, குற்றம்கண்டுபிடிக்கும் ஆவியாக வளர்ந்துவிட அனுமதித்தல் என்பதற்கு எதிராக நாம் எப்போதும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்பது உண்மையே. [29]பல மொழிபெயர்ப்புகள் வசனப்பகுதியில் வார்த்தையைக் கூட்டிய செயலானது, இயேசு தம்மீதும் தேவன்மீதும் செலுத்தப்படும் அன்பைக் குறிப்பிட்டாரா அல்லது

அவர் (சக கிறிஸ்தவர்கள் உட்பட) பிறமனிதர்கள் மீது செலுத்தப்படும் அன்பைக் குறிப்பிட்டாரா என்பது பற்றி மொழிபெயர்ப்பாளர்கள் நினைத்தவற்றைச் சுட்டிக்காண்பிக்கின்றன. [30]தேவன்மீதும் மனிதகுலத்தின்மீதும் எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களின் தொடக்ககால அன்பைக் குறித்து நடபடிகள் 19 சிலகருத்துக்களை வெளிப் படுத்துகிறது. அவர்கள் தங்கள் மந்திரவாதப் புத்தகங்களைச் சுட்டெரித்தனர் மற்றும் அந்தப் பகுதி முழுவதிலும் சுவிசேஷம் பரவ உதவினர் (வசனங்கள் 10, 18-20; எபேசியர் 1:15; 6:24ஐக் காணவும்).

[31]*The New Testament in Modern English*, ed. J. B. Phillips (New York: Macmillan Co., 1958). [32]"அவர்கள் கிறிஸ்துவினால் அவரது உண்மையான சபை என்று மதிக்கப்படுவதில் இருந்து நீக்கப்படுவார்கள்" (J. W. Roberts, *The Revelation to John [The Apocalypse]*, The Living Word Commentary Series [Austin, Tex.: Sweet Publishing Co., 1974], 11). "விளக்குத்தண்டை நீக்கிப்போடுதல்" பற்றி மற்ற விளக்கங்களும் தரப்பட்டுள்ளன, ஆனால் இது சந்தர்ப்பப் பொருளுடன் மிகவும் சீர்பொருந்தியிருப்பதாகக் காணப்படுகிறது. இன்றைய நாட்களில், பழங்கால எபேசுவில் இருந்து பார்வை படும் தொலைவு வரையிலும் நமது கர்த்தருடைய சபை எதுவும் நிலவுவதில்லை. [33]Richard Rogers, "Letters to the Seven Churches, No. 1," *Video Series on Revelation 4* (Lubbock, Tex.: Sunset Extensin Department, 1990). [34]நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்த சபை ஒன்றிற்கு இயேசு இதை எழுதினார்; இவ்விதமாக அவரது புத்திகூறுதல் என்பது சற்றுக்காலம் கிறிஸ்தவர்களாய் இருந்தவர்களுக்கானதாக இருந்தது. கவனித்துக் கேட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் புதுக்கிறிஸ்தவர்களாய் இருந்திருந்தால், அவர்கள் தங்கள் ஆரம்பநிலையின் உற்சாகத்தைப் பராமரிப்பதில் அக்கறை கொள்ளவில்லையென்றால் என்ன நடக்கக்கூடும் என்ற எச்சரிக்கையின்மீது வலியுறுத்தம் மாற்றப்பட்டிருக்கலாம். [35]இப்பகுதியில் துணைக்கருத்துக்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ள மூன்று 'R' கள் பல எழுத்தாக்கங்களில் காணப்படுகின்றன; இதைத் தொடங்கிவைத்தவர் யார் என்று அறிதல் சாத்தியமற்றதாக உள்ளது. [36]நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது, எனவே இது "நினைவுகூருதலைத் தொடர்ந்து செய்" அல்லது "தொடர்ந்து இதை நினைவில் வைத்துக்கொள்'' என்று மொழிபெயர்க்கப்படக்கூடும். [37]மூலபாஷையில் இவ்விடத்தில், ஒருமுறை மாத்திரம் நடைபெறுவதைக் குறிப்பிடும் வினைச்சொல் பயன்படுகிறது, இது ஒருமுறை நடக்கும் நிகழ்ச்சியைச் சுட்டிக்காண்பிக்கிறது. மனந்திரும்புதல் என்பது பாவத்தைக் கூர்மையாக முறித்துப்போடுதலை விளைவிக்க வேண்டும். [38]*Liddell and Scott's Greek-English Lexicon,* 25th ed., rev. and abr. (London: Clarendon Press, 1892), s.v. "*metanoia.*" [39]மூன்றாவது 'R' க்குச் சில எழுத்தாளர்கள் "Return" என்பதைப் பயன்படுத்துகின்றனர். [40]உலகத்தில் உங்கள் பகுதியில் உள்ள மக்கள் பிரியத்தை வெளிப்படுத்தப் பல வழிமுறைகளைக் கொண்டிருக்கலாம். உங்கள் சூழ்நிலைக்குத் தக்கவாறு இந்த விளக்கங்களைத் தழுவியமைத்துக் கொள்ளவும்.

[41]அவர்கள் இல்லத்தில் பிள்ளைகளைக் கொண்டிருக்கும்போது, அவர் களிருவரும் சாத்தியப்பட்டால் ஒவ்வொரு வாரமும் தங்களுக்கு மட்டும் தனிமையான இரவு ஒன்றைக் கொண்டிருக்கும்படி நான் அவர்களை உற்சாகப் படுத்துவதுண்டு. வாரக்கடைசியில் அவர்கள் இருவர் மாத்திரம் தனியே வெளிச்செல்லும்படியும் கூட நான் அடிக்கடி ஊக்குவிப்பதுண்டு. [42]இந்தப் புத்திகூறுதல் இயேசுவுக்குப் பிரியமானதாக இருந்தது. (உதாரணமாக, மத்தேயு 11:15; 13:43; மாற்கு 4:23; லூக்கா 14:35ஐக் காணவும்.) [43]"பரதீசு" என்ற வார்த்தை பெர்சிய மொழியில் தோற்றம் பெற்றது என்று நினைக்கப்படுகிறது, இது பெர்சிய

அரசர்கள் மற்றும் பிரபுக்கள் ஆகியோரின் பூங்காக்கள் அல்லது சந்தோஷத் தோட்டங்களைக் குறிப்பிடுகிறது. இவ்வார்த்தை செய்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் ஏதேன் தோட்டத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப் பட்டது. இவ்விடத்தில் இது, தேவனுடைய பிரசன்னத்தில் மனிதனின் மீளக்கட்டுவிக்கப்பட்ட நிலையிலான வட்டாரமான பரலோக ஏதேன் தோட்டத்தைக் குறிக்கிறது. [44]இது வெளிப்படுத்தின விசேஷத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. இந்தப் புத்தகத்தில் முன்பு உள்ள, "நாம் ஜெயம்கொண் டோம்! தேவனுக்கு நன்றி!" என்ற பாடத்தில் காணவும். [45]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 112. [46]தேவனே இருதயத்தை அறிவதில் மகா பெரியவராக இருக்கின்றார் (எரேமியா 17:10; 1 இராஜாக்கள் 8:39; 1 நாளாகமம் 28:9; லூக்கா 16:15). நமது ஜெபமானது சங்கீதம் 139:23, 24ல் தாவீதின் ஜெபத்தைப் போல் இருக்க வேண்டும். [47]நினைவுகூருதல், மனந்திரும்புதல் மற்றும் திரும்பச் செய்தல் ஆகியவற்றின் அவசியம் குறித்துத் தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தவும். மனந்திரும்புதல் என்பது, (மனிதசுபாவத்தில் சாத்தியமான அளவுக்கு) விஷயங்களை நேராக்கிக்கொள்ளுதலை உள்ளடக்குகிறது. உங்கள் உரையைக் கேட்பவர்களில் சிலருக்கு, இது சபையுடன் விஷயங்களை நேராக்கிக்கொள்ளுதலை உள்ளடக்கியிருக்கலாம் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16). இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், இந்த எடுத்துரைப்பு கிறிஸ்தவரல்லாத வர்களைக் காட்டிலும் கிறிஸ்தவர்களை நோக்கியே அதிகமாய்த் திருப்பப் பட்டுள்ளது என்று குறிப்பிடுவதற்கு நீங்கள் விரும்பலாம். கிறிஸ்தவரல்லாதவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலை ஊக்குவிப்பதற்கு நீங்கள் கூடுதலாக, "கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கக் கூடியதாக நாம் பேசிய உணர்வெழுச்சியைப் பெறுவதற்கு நீங்கள் விரும்பவில்லையா? அப்படியென்றால் மாற்கு 16:15, 16ல் காணப்படுகிற கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து ஏன் இன்றே நீங்கள் ஞானஸ்நானம் பெறக்கூடாது?" என்று கேட்கலாம். இந்தக் கீழ்ப்படிதல் இருதயத்திலிருந்து வரவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள் (ரோமர் 6:3-6, 17, 18). இதைத் தொடர்ந்து, ஏற்புடையதான ஒரு நல்ல அழைப்புப் பாடலைப் பாடலாம். [48]John Risse, "Ephesus: The Real Loser," *The Book of Revelation Series,* vol. 1, Audiotapes (Abilene, Tex.: Southern Hills church of Christ, 1991). [49]Jay Lockhart, "The Letter to the Church at Ephesus," *Truth for Today* (March 1988): 6-9.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. எபேசுவில் இருந்த சபை முதலில் குறிப்பிடப்பட்டது ஏன் என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன?
2. எபேசு நகரத்தைப் பற்றி நீங்கள் அறிவது என்ன? எபேசுவில் சபை எவ்வாறு நிலைநாட்டப்பட்டு வளர்ந்தது என்பது பற்றிக் கூறவும்.
3. இந்தக் கடிதத்தில் இயேசுவைப் பற்றிய விவரிப்பு பற்றிய விஷயத்தில், எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்கள் உறுதியாக அறியத் தேவையாயிருந்த இரண்டு கருத்துக்கள் யாவை?
4. சபைகளின் மத்தியில் இயேசு நடக்கையில், நீங்கள் ஆராதிக்கும் சபையில் அவர் எவற்றைக் காணுகின்றார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? மிகமுக்கியமாக, அவர் உங்கள் இருதயத்தில்

*காண்கிறது என்ன?*

5. *எபேசு சபையில் பாராட்டத்தக்க விஷயமாக இயேசு கண்டது என்ன? இந்தப் பண்புகள் எல்லா சபை(க்குழுமங்)களுக்கும் அவசியமானவைகளா?*
6. *நிக்கொலாய் மதஸ்தர் என்பவர்கள் யார்?*
7. *எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்கள் சிலவற்றை வெறுத்ததை கர்த்தர் பாராட்டினார் என்பது உங்களுக்கு வினோதமாகத் தோன்றுகிறதா? கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் எவற்றை வெறுக்க வேண்டும்? யாரை நாம் வெறுக்கக் கூடாது?*
8. *எபேசுவில் இருந்த சபையானது மிகவும் நற்காரியங்களைச் செய்திருந்தாலும், அதன் "மரணத்திற்கு ஏதுவான தவறு" என்னவாக இருந்தது? இந்தப் பிரச்சனை மும்முரமானதாக இருந்தது (மற்றும் இருப்பது) ஏன்?*
9. *"ஆதியில் கொண்டிருந்த அன்பு" என்ற சொற்றொடரை விவாதித்து அறியவும். திருமணத்தில் "ஆதியில் கொண்டிருந்த அன்பு" என்பது என்ன? கிறிஸ்தவ வாழ்வில் ''ஆதியில் கொண்டிருந்த அன்பு'' என்பது எதுவாக உள்ளது?*
10. *திருமணத்திலோ அல்லது நமது ஆவிக்குரிய வாழ்விலோ, "ஆதியில் கொண்டிருந்த அன்பின்'' வலிவார்ந்த தன்மையும் உணர்வெழுச்சியும் தாமாகவே நிலைத்து இருக்கிறதா?*
11. *அவர்கள் மனந்திரும்பாவிட்டால், அவர்களின் விளக்குத் தண்டை அவர்களிடத்தில் இருந்து நீக்கிப்போடப் போவதாக இயேசு எச்சரித்தபோது அவர் எதை அர்த்தப் படுத்தினார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?*
12. *அன்பின் சுடரை மறுபடியும் தூண்டி எழுப்ப இயேசு தந்த மும்மடங்கு நிவாரணம் என்ன?*
13. *வெறுமனே "கர்த்தருக்காக ஊழியம் செய்தல்" மற்றும் "முதலில் நீங்கள் செய்தவாறு செய்தல்" ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு என்ன?*
14. *எபேசுவில் ''ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு'' இயேசு கொடுத்த வாக்குத்தத்தம் பற்றி விவாதித்து அறியவும்.*
15. *எபேசு சபைக்கு எழுதப்பட்ட இந்தக் கடிதம், எல்லாக் கடிதங்களைக் காட்டிலும் அதிகம் கலக்கம் ஏற்படுத்தக் கூடியது என்று அழைக்கப்படுவது ஏன்?*